பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 03 2024 **FRIDAY** 6 30 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தேர்தலுக்கான அரசியல் கட்சி தலைவர்களின் பிரச்சாரம் தீவிரம் அடைந்துள்ளது.

2. **c-vigil** செயலி மூலம் பதிவு செய்யப்பட்ட 99 சதவீத புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

3. வருமான வரி பாக்கியை செலுத்தக் கோரி, காங்கிரஸ் மற்றும் இந்திய கம்யூனிஸ் கட்சிகளுக்கு வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

4. இயேசு பிரான் சிலுவையில் அறையப்பட்டு உயிர்நீத்த புனித வெள்ளி தினம் இன்று அனுசரிக்கப்பட்டது.

5. ஜப்பான் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – ருத்துஜா போஸ்லே இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

**>>>><<<<**

தமிழகத்தில் 39 தொகுதிகள் உட்பட நாடுமுழுவதும் மக்களவைத் தேர்தல் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 102 தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

முதல்கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஏப்ரல் மாதம் 19ஆம் தேதி நடைபெறவுள்ளது.

தேர்தலை ஒட்டி, முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து, வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பெண்களை மையப்படுத்தி மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நமோ செயலி வாயிலாக தமிழக பிஜேபி தொண்டர்களுடன் 'எனது பூத் – வலிமையான பூத்' என்ற நிகழ்ச்சியில் கலந்துரையாடிய அவர், தமிழ் மொழியின் பெருமையை பறைசாற்றும் விதத்தில் காசியில் தமிழ் சங்கமம் நிகழ்ச்சி நடைபெற்றதாக கூறினார்.

தருமபுரி, கிருஷ்ணகிரி தொகுதியில் திமுக கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

கரூர் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளரான ஜோதிமணியை ஆதரித்து, திமுகவின் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் பிஜேபி கூட்டணி சார்பில் போட்டியிடும் த.மா.கா வேட்பாளரை ஆதரித்து, பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை, ஸ்ரீபெரும்புதூர் மற்றும் பல்வேறு இடங்களில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

பாமக வேட்பாளர் திருமதி. சௌமியா அன்புமணி அரூரில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

மதுரை, கே.கே.நகர் பகுதியில் தேர்தல் பணிமனை அலுவலகத்தை திறந்து வைத்து பேசிய அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி மக்களிடம் தங்கள் கூட்டணிக்கு அமோக வரவேற்பு இருப்பதாக கூறினார்.

இதற்கிடையே, **c-vigil** செயலி மூலம் பதிவு செய்யப்பட்ட 99 சதவீத புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

கடந்த 14 நாட்களில் 79 ஆயிரம் விதிமீறல்கள் குறித்த புகார்கள் தெரிவிக்கப்பட்டதாகவும், இதில் 89 சதவீத புகார்களுக்கு 2 மணிநேரத்திற்குள்ளாகவே தீர்வு காணப்பட்டதாகவும் அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்களிப்பதற்காக பணம் மற்றும் பரிசுப் பொருட்களை வழங்குவது குறித்து ஆயிரத்து 400 புகார்கள் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் உரிய ஆவணமின்றி கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் பரிசுப் பொருட்களை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்து வருகின்றனர்.

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் நடந்த வாகன தணிக்கையின்போது, உரிய ஆவணங்களின்றி எடுத்துச் செல்லப்பட்ட ஒரு கோடியே 32 லட்சம் ரூபாயை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

திருச்சி மக்களவைத் தொகுதியில் தேர்தல் தொடர்பான புகார்களை 9 4 8 7 4 6 4 6 5 1 என்ற கைபேசி எண்ணில் தெரிவிக்கலாம் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. வருண்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில், இன்று தேர்தல் பணிக்கு வராத ஆயிரத்து 500 அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விளக்கம் கேட்டு, நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாக சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுக்கு தொலைக்காட்சி மற்றும் வானொலியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது.

தேசிய கட்சிகள் தூர்தர்ஷனில் 15 மணிநேரத்திற்கு குறையாமலும், மாநில கட்சிகள் 30 மணிநேரத்திற்கு குறையாமலும் பிரச்சாரம் செய்ய நேரம் ஒதுக்கீடு செய்யப்படும் என்று ஆணையம் அறிவித்துள்ளது.

இதேபோல் வானொலியிலும் அங்கீரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகள் பிரச்சாரம் செய்ய நேரம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இதுகுறித்த வழிகாட்டு நெறிமுறைகளை தேர்தல் ஆணையம் தனது இணையதளத்தில் வெளியிட்டுள்ளது.

>>>><<<<

மக்களவைத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள், வாக்களிப்பதை ஊக்குவிப்பதற்கு நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

நாமக்கல்லைச் சேர்ந்த மாணவி, வாக்களிப்பது ஒவ்வொருவரின் உரிமை என்று தெரிவித்தார்.

இதற்கிடையே, ராணிப்பேட்டை மாவட்டம், தட்டச்சேரி கிராமத்தில் பழங்குடியினர் வாழும் பகுதியில் மகளிர் சுயஉதவி குழுவினரின் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

>>>><<<<

1993-94 முதல் 2019-20 வரையிலான காலகட்டத்தில் காங்கிரஸ் கட்சி செலுத்த வேண்டிய வரி மற்றும் அபராதம் ஆயிரத்து 823 கோடி ரூபாயை செலுத்தக் கோரி வருமான வரித்துறை அக்கட்சிக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

ஏற்கனவே, காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்ட நிலையில், தற்போது வருமான வரித்துறை இந்த நோட்டீஸை அனுப்பியுள்ளது.

இதற்கு காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

எட்டு ஆண்டுகால பழைய வருமான வரியை மீண்டும் ஆய்வு செய்து, ஆயிரத்து 823 கோடி ரூபாய் வரி பாக்கியை கட்டச் சொல்வது விதி மீறல் என்று காங்கிரஸ் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே, 11 கோடி ரூபாய் வரி பாக்கியை செலுத்துமாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

>>>><<<<

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு உயிர்நீத்த தினமான புனித வெள்ளி இன்று அனுசரிக்கப்பட்டது.

இந்நாளையொட்டி தமிழகம் உட்பட நாடுமுழுவதும் தேவாலயங்களில் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றன.

தூத்துக்குடியில் உள்ள பனிமயமாதா பேராலயத்தில் நடைபெற்ற சிலுவைப்பாதை வழிபாட்டில் ஏராளமான கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டனர்.

இதில், இயேசு கிறிஸ்து சிலுவையை சுமந்து செல்வது போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழும் மூன்றாம் நாளான ஈஸ்டர் பண்டிகை நாளை மறுநாள் கொண்டாடப்படவுள்ளது.

>>>><<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ்வரை அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள மக்களவைத் தொகுதிகளில் வாக்குச்சாவடி மையங்களில் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. பாஸ்கர பாண்டியன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>><<<<

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் பேருந்து நிலையத்தில், 100 சதவீத வாக்களிப்பை உறுதி செய்யும் வகையில் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சியரும், தேர்தல் அலுவலருமான திருமதி கலைச்செல்வி தொடங்கி வைத்தார்.

>>>><<<<

தருமபுரி மக்களவைத் தொகுதியில் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பால் பிரின்ஸிலி ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது.

>>>><<<<

சேலம் மக்களவைத் தொகுதியில் வாக்காளர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில், வீணை வாசித்து விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது.

>>>><<<<

மதுரை, திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய ஸ்வாமி கோவில் பங்குனி பெருவிழாவை ஒட்டி இன்று நடைபெற்ற தேரோட்டத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

>>>><<<<

*விளையாட்டுச் செய்திகள்*

ஜப்பான் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – ருத்துஜா போஸ்லே இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 7-6, 6-3 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் **Madelaine Brooks**-ஹாங்காங்கின் **Eudice Chong** இணையை வென்றது.

>>>><<<<

மெக்சிக்கோவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் அரையிறு ஆட்டத்தில் இந்தியாவின் ரித்விக் - நிக்கி கலியாண்டா இணை இன்று அமெரிக்காவின் **Ryan Seggerman-Patrik** இணையை எதிர்கொள்கிறது.

>>>><<<<

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில், கொல்கத்தா இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>**END**<<<<